# கோதை நாச்சியார் தாலாட்டு

S. வையாபுரிப் பிள்ளை, B. A., B. L.,
உபசரித்தது.

ஆழ்வார்திருநகரி திருஞானமுத்திரைப் பிரசுராலயம்
பதிப்பாசிரியர்: பெரியன் ஸ்ரீநிவாஸன்

காப்பிரைட்]    1928    [விலை 40 பைசா.

# கோதை நாச்சியார் தாலாட்டு

S. வையாபுரிப் பிள்ளை, B. A., B. L.,
உபசரித்தது.

காப்பிரைட்]    1928    [விலை 40 பைசா.

ஸ்ரீ ஆனந்தவிநாயகர் அச்சகம், ஸ்ரீவைகுண்டம்.

ஸ்ரீ ராமஜயம்



# கோதை நாச்சியார் தாலாட்டு

## காப்பு.

சீரார்ந்த கோதையின்மேல்ச் சிறப்பாகத் தாலாட்ட
பாரோர் புகழநிதம் பாடவே வேணுமென்று
''காரூர்ந்த தென்புதுவைக் கண்ணன் திருக்கோயில்
ஏரார்ந்த சேனையர்கோன்'' இணையடியுங் காப்பாமே.

## நூல்

தென்புதுவை விஷ்ணுசித்தன் திருவடியை நான்தொழுது
இன்பமுடன் தாலாட்டு இசையுடனே யான்கூற 1
தெங்கமுகு மாலானை சிறந்தோங்கும் ''ஸ்ரீ ரங்கம்
நம் பெருமாள்'' பாதம் நமக்கே துணையாமே. 2
சீரார்ந்த கோயில்களும் சிறப்பாக கோபுரமும்
காரார்ந்த மேடைகளும் கஞ்சமலர் வாவிகளும் 3
மின்னார் மணிமகுடம் விளங்க அலங்க்ருதமாய்
பொன்னாலே தான்செய்த பொற்கோயில் தன்னழகும் 4
கோபுரத்து உன்னிதமும் கொடுங்கை நவமணியும்
தார்புரத் தரசிலையும் சந்தனத் திருத்தேரும் 5
ஆரார் தலத்தழகும் அம்மறையோர் மால்திரமும்
சீரார் தனத்தழகும் சிறப்பான உத்ஸவமும் 6
வேத மறையோரும் மேன்மைத் தலத்தோரும்
கீத முறையாலே கீர்த்தனங்கள் தான்முழங்க 7
பாவலர்கள் பாமாலை பாடி மணிவண்ணன்
ஆவலாய்ப் போற்றி அனுதினமும் தான்துதிக்க 8

கச்சுமுலை மாதர் கவிகள் பலபாட
அச்சுதனுர் சங்கம் அழகாய்த் தொனிவிளங்க 9

தித்தியுடன் வீணை சகமுழுதுந் தான்கேட்க
மத்தளமுங் கைமணியும் அந்தத் தவிலுடனே 10

உத்தமர் வீதி உலாவியே தான்விளங்க
............................................... 11

பேரிகையும் எக்காளம் பின்பு செகண்டிமுதல்
பூரிகை நாதம் பூலோகம் தான்முழங்க 12

தும்புருவும் நாரதரும் துய்யகுழ லெடுத்து
செப்பவள வாயால் திருக்கோயில் தான்பாட 13

அண்டர்கள் புரந்திரனும் அழகு மலரெடுத்து
தொண்டர்களும் எண்டிசையுந் தொழுது பணிந்தேத்த 14

வண்டுகளும் பாட மயிலினங்கள் தான்பாடத்
தொண்டர்களும் பாடத் தொழுது பணிந்தேத்த 15

பண்பகரும் பாவலர்கள் பல்லாண் டிசைபாட
செண்பகப்பூ வாசனைகள் திருக்கோயில் தான்வீச 16

இந்திரனும் இமையோரும் இலங்கும் மலர்தூவ
சந்திரனும் சூரியனுஞ் சாமரங்கள் தான்போட 17

குன்றுமணி மாடங்கள் கோபுரங்கள் தான்துலங்க
சென்றுநெடு வீதியிலே திருவாய் மொழி விளங்க 18

அன்னம் நடைபயில் அரிவையர் மடலெழுத
சென்னெல் குலைசொரிய செங்குவளை தான்மலர 19

கரும்பு கலகலெனக் கஞ்ச மலர்விரிக்க
சுரும்பு குழலூத தோகை மயில்விரிக்க 20

மாங்கனிகள் தூங்க மந்தி குதிகொள்ள
தேன்கூடு விம்மிச் செழித்து வழிந்தோட 21

சென்னெல் விளைய செகமுழுதும் தான்செழிக்க
கன்னல் விளைய கமுகமரம் தான்பழுக்க 22

வெம்புலிகள் வாழும் மேரு சிகரத்தில்
அம்புலிகைக் கவளமென்று தும்பி வழிபறிக்கும் 23

மும்மாரி பெய்து முழுச்சம்பாத் தான்விளைய
கம்மாய்கள் தான்பெருகி கவிந்து வழிந்தோட 24

வாழையிடை பழுத்து வருக்கைப் பிலாபழுத்து
தாழையும் பூத்துத் தலையாலே தான்சொரிய 25

புன்னையும் பூக்க புறத்தே கிளிகூவ
அன்னமும் பேசும் அழகான தென்புதுவை. 26

தலையருவி பாயும் தடஞ்சூழ்ந்த முக்குளமும்
மலையருவி பாயும் வயல் சூழ்ந்த தென்புதுவை. 27

பவளமுடன் வச்சிரம் பச்சை மரகதமும்
தவளமொளி முத்துத் தான்கொழிக்கும் தென்புதுவை 28

காவணங்கள் மேவிக் கதிரோன் தனைமறைக்கும்
பூவணங்கள் சூழ்ந்து புதுவை மணங்கமழும் 29

தென்னை மடல்விரிய செங்கரும்பு முத்தீன
புன்னை முகிள்விரிய புதுவை வனந்தனிலே. 30

## திரு அவதாரம்

சீராரு மெங்கள்விஷ்ணு சித்தர்நந் தாவனத்தில்
ஏராருந் துளசிமுல்லை யேகமாய்த் தானும்வச்சு 31

வச்ச பயிர்களுக்கு வளரவே நீர்பாய்ச்சி
உச்சிதமாய்ப் பயிர்கள்செய்து உகந்திருக்கும் வேளையிலே; 32

பூமிவிண்டு கேள்க்க புகழ்பெருகு விஷ்ணுசித்தன்
பூமிவிண்ட த்லம்பார்ந்து போனார்காண் அவ்வேளை 33

ஆடித் திருப்பூரத்தில் அழகான துளசியின்கீழ்
நாடி யுதித்ததிரு நாயகியைச் சொன்னாரார்! 34

அப்போது விஷ்ணுசித்தன் அலர்மகளைத் தானெடுத்து
செப்பமுடன் "கண்ணே திருவாய் மலர்ந்தருள்வீர்"!! 35

"அய்யா உமக்கடியேன் அருமை மகளாக்கும்,
மெய்யார்ந்த தாயார் மென்மைத் துளசி" என்றார்!!! 36

அப்போது கேட்டு அருளப் பரவசமாய்
செப்பமுடன் பெண்ணேந்தி திருக்கோயில் தான்புகுந்து; 37

பூந்துளவ மணிவண்ணன் பொன்னடிக்கீழ் பெண்ணைவிட
ஊர்ந்து விளையாடி யுலாவியே தான்திரிய! 38

பெண்கொணர்ந்த விஷ்ணுசித்தன் பெருமாளைத் தானோக்கி
'பெண்வந்த காரணமென் பெருமாளே சொல்லு''மென்றார்

அப்போது மணிவண்ணன் 'அழகான பெண்ணுனக்கு
செப்பமுடன் வந்த திருக்கோதை நாயகியார் 40

என்று பேருமிட்டு எடுத்துக் குழந்தைதனை
உன்றன் மனைக்கு உகந்துதான் செல்லும்' என்றார். 41

சொன்னமொழி தப்பாமல் சுந்தரியைத் தானெடுத்து
கன்னல் மொழி விரசைசு கையிலே தான்கொடுக்க. 42

அப்போது விரசையரும் அமுதுமுலை தான்கொடுக்க
செப்பமுடன் தொட்டிலிலே சீராய் வளரவிட்டு 43

மாணிக்கங் கட்டி வயிர மிடைக்கட்டி
ஆணிப்பொன் னால்செய்த வண்ணச் சிறுதொட்டில் 44

பேணி யுனக்குப் பிரமன் விடுதந்தான்
மாணிக்கமே தாலேலோ மங்கையரே தாலேலோ. 45

அன்னமே தேனே அழகே அரிவையரே
சொன்னமே மானே தோகையரே தாலேலோ. 46

பொன்னே புனமயிலே பூங்குயிலே மாந்துளிரே
மின்னே விளக்கொளியே வேதமே தாலேலோ. 47

பிள்ளைகளும் இல்லாத பெரியாழ்வார், தனக்குப்
பிள்ளைவிடாய் தீர்த்த பெண்ணரசே தாலேலோ. 48

மலடி விரசையென்று வையகத்தோர் சொல்லாமல்
மலடு தனைத்தீர்த்த மங்கையரே தாலேலோ. 49

பூவனங்கள் சூழும் புதுவா புரிதனிலே
காவனத்தில் வந்துதித்த கன்னியரைச் சொன்றாரார். 50

கண்ணேயென் கண்மணியே சற்பகமே தெள்ளமுதே
பெண்ணே திருமகளே பேதையரே தாலேலோ. 51

மானே குயிலினமே வண்டினமே தாருவே
தேனே மதனுபி ஷேகமே தெள்ளமுதே 52

வானோர் பணியும் மரகதமே மாமகளே
ஏனோர் கலிநீங்க இங்குவந்த தெள்ளமுதே. 53

பூமலர்கள் சூழும் பூங்கா வனத்துதித்த
மாமகளே சோதி மரகதமே தாலேலோ. 54

வண்டினங்கள் பாடும் மதுவொழுகும் பூங்காவில்
பண்டுபெரி யாழ்வார் பரிந்தெடுத்த தெள்ளமுதே. 55

செந்நெல்களை முத்தீன்று செழிக்கும் புதுவையிலே
அன்னமே மானே ஆழ்வார் திருமகளே 56

"வேதங்க ளோதி வென்றுவந்தஆழ்வார்க்கு
சீதைபோல் வந்துதித்த திருமகளைச் சொன்னாரார்"! 57

முத்தே பவளமே மோகனமே பூங்கிளியே
வித்தே விளக்கொளியே வேதமே தாலேலோ. 58

"பாமாலைபாடி பரமனுக்கு யென்னாளும்
பூமாலை சூடிப் புகழ்ந்தளித்த தெள்ளமுதே"!! 59

அஞ்சு வயதில் அவனியில் வந்துதித்த
பிஞ்சாய்ப் பழுத்த பெண்ணமுதே தாலேலோ. 60

"எந்தை தந்தையென்று இயம்பும்பெரி யாழ்வார்க்கு
மைந்தர் விடாய் தீர்த்த மாதேநீ" தாலேலோ. 61

"பொய்கைமுத லாழ்வார்க்கும் பூமகளாய் வந்துதித்த
மைவிழிசோதி மரகதமோ" தாலேலோ! 62

"உலகளந்த மாயன் உகந்துமணம் பண்ண
தேவாதி தேவர் தெளிந்தெடுத்த தெள்ளமுதோ"! 63

"சொல்லை நிலையிட்ட சுந்தரராம் ஆழ்வார்க்கு
செல்லப்பெண் ணாய்"வந்த திருமகளைச் சொன்னாரார்! 64

நாராணனை விஷ்ணுவென்று நண்ணுமெங்க ளாழ்வார்க்கு
காரணமாய் வந்துதித்த கற்பகத்தைச் சொன்னாரார்! 65

உள்ள முருகி ஊசலிடும் பட்டருக்கு
பிள்ளைவிடாய்தீர்த்த பெண்ணமுதே தாலேலோ! 66

பாகவ தார்த்தம் பாடுமெங் களாழ்வார்க்கு
தாகவிடாய் தீர்த்த தங்கமே தாலேலோ! 67

தென்புதுவை வாழும் ஸ்ரீவிஷ்ணு தீர்த்தனுக்கு
அன்புடனே வந்துதித்த அன்னமே தாலேலோ! 68

சாஸ்திரங்கள் ஓதும் சத்புருஷன் ஆழ்வார்க்கு
சோஸ்திரஞ் செய்து துலங்கவந்த கண்மணியோ! 69

வாழைகளும் சூழ்புதுவை வாழுமெங்க ளாழ்வார்க்கு
ஏழையாய் வந்துதித்த ஏந்திழையே தாலேலோ! 70

கன்னல்களுஞ் சூழ்புதுவை காக்குமெங்க ளாழ்வார்க்கு
பன்னுதமிழ் என்னாளும் பாடநல்ல நாயகமோ! 71

பல்லாண்டு பாடும் பட்டர்பிரா னாழ்வார்க்கு
நல்லாண்டில் வந்துதித்த நாயகியைச் சொன்னாரார்! 72

எந்தாகம் தீத்து ஏழேழு தலைமுறைக்கும்
வந்தாளும் செல்வ மங்கையரே தாலேலோ! 73

என்றுநிதம் கோதையரை எடுத்து வளர்க்கையிலே;
'அன்றொருநாள் விஷ்ணுசித்தன் முதுமலர் தொடுத்துவைக்க,

தொடுத்துவைத்த மலரதனைச் சூடி நிழல்பார்த்து
விடுத்துவைத்துக் கோதையரும் விளையாட்டி லேதிரிய, 75

அப்போது விஷ்ணுசித்தன் அனுஷ்டான முதலசெய்
தெப்போதும் போல்கோயிற் கேகவே வேணுமென்று 76

தொடுத்துவைத்த மாலைதனைச் சுவாமிக்கே சாத்தவென்று
எடுத்தேகுமாழ்வாரும் என்கையிலே கேசங்சங்கண்டு 77

பெண்ணரசி கோதை குழல்போலே யிருக்குதென்று
பெண்ணான கோதைக்கு காட்டியே தானுருக்கி 78

பின்பு வனம்புகுந்து பிரிமாய்ப் பூக்கொய்து
அன்புடனே மாயனுக் கலங்கார மாய்ச்சாத்த''. 79

அப்போது மணிமண்ணன் ஆழ்வாரைத் தான்பார்த்து
"இப்போது மணங்காணேன் ஏதுகாணாழ்வாரே'' 80

என்றுசொல்ல, ஆழ்வாரும் இருகையும் தான்கூப்பி;
"துன்றிவளக் கோதையரும் சூடியே தானும்வைத்தாள். 81

அம்மாலை தள்ளி அழகான பூக்கொணர்ந்து
நன்மாலை கொண்டு நானுனக்குச் சாத்தவந்தேன்'' 82

என்றுசொல்ல, மணிவண்ணன் இன்பமாய்த் தான்கேட்டு,
''நன்ருக ஆழ்வாரே நானுனக்குச் சொல்லுகிறேன்:- 83

ஒன்மகளும் பூச்சூட்டி ஒருக்கால் நிழல்பார்த்து
பின்புகளைந்து பெட்டியிலே பூவைப்பாள். 84

அம்மாலை தன்னை ஆழ்வாரேநீ ரேத்துவந்து
இம்மாலை சாத்தி யிருந்தீ ரிதுவரைக்கும். 85

இன்றுமுதல் பூலோக மெல்லாருந் தானறிய
அன்றுமலர் கொய்து அழகாசத் தான்தொடுத்து 86

கோதை குழல்சூடிக் கொணருவீர் நமக்குநிதம்
கீதமே ளத்தோடும் கீர்த்தனங்கள் தன்ஞேடும் 87

இன்றுமுதல் சூடிக்கொடுத்தா ளிவள்பேரும்
நன்ருகத்தான் வாழ்த்தும் நன்மையே தான்பெறுவீர்! 88

என்றுரைக்க மணிவண்ணன் யேகினர்காண் ஆழ்வாரும்,
சென்றுவந்த மாளிகையில் சிறப்பா யிருந்துநிதம் 89

நீராட்டி மயிர்முடித்து நெடுவேற்கண் மையெழுதி
சீராட்டிக் கோதையரைச் சிறப்பாய் வளர்க்கையிலே. 90

ஊரார் உறமுறையார் உற்ருர்கள் பெற்ருர்கள்
சீரான ஆழ்வாரைச் சிறப்பாகப் பெண்கேழ்க்க; 91

அப்போது விஷ்ணுசித்தன் அழகான கோதையரை
செப்பமுடன் மடியில்வைத்துத் திருமாலைதான் கொடுத்து

'உனக்கேதம் பிள்ளைகட் குகந்தே மலர்சூடி
மணைக்கா வலனென்றும் மகிழ்ந்தேத்தி வாழும் என்ருர். 93

அவ்வார்த்தை கேட்டு அழகான கோதையரும்
செவ்வான வார்த்தையென்று திரும்பியே தானுரைப்பாள்;

வையம் புகழய்யா மானிடவர் பதியன்று!
''உய்யும் பெருமாள் உயர்சோலை மலையழகர் 95

இவர்கள் தாம்பதி இரண்டாம் பதியரில்லை!!
அவர்கள் தம்பாட்டில் அனுப்பியே வையும்!!! என்ருர். 96

இவ்வார்த்தை கேட்டு இனத்தோர்க ளெல்லோரும்
செவ்வான வடிதேடித் தேசத்தே போனுர்கள். 97

போனபின்பு விஷ்ணுசித்தன் பொன்னே புனமயிலே
ஞானமுடன் வந்துதித்த நாயகியைச் சொன்னூரார். 98

இப்படிக் கோதையரும் இருந்து வளருகையில்,
ஒப்பிலாள்நோம்பு உகந்துதான் நோர்க்கவென்று 99

மணிவண்ணர் தனைத்தேடி மனக்கருத்தை யவர்க்குரைத்து,
பணிசெய்த விருதுகளைப் பாரிப்பாய்த் தான்கேழ்க்க! 100

மகிழ்ந்துமணி வண்ணன் மனமுவந்து மறையோர்க்கு
புகழ்ந்துதான் உத்தரவு பொருமுதலுந் தான்கொடுக்க!!

உத்தரவு வாங்கி உலகெலர்ந் தான்நிறைய;
'நித்தமொரு நோன்பு நேத்தியாய்த் தான்குளித்து 102

மாயவனை நோக்கி வந்தி மலரெடுத்து
மாயவனைப் போத்தி மணம்புணர வேணுமென்று 103

மார்கழி நீராடி மகிழ்ந்து திருப்பாவை
சீர்கள் குறையாமல் சிறப்பாகத் தான்பாடி 104

பாடிப் பறைகொண்டு பரமனுக்கு பூமாலை
சூடிக் கொடுத்து தொழுது நினைந்திருக்க' 105

மாயவனும் வாராமல் மாலைகளுந் தாராமல்
ஆயன்முகங் காட்டாமல் ஆரு மனுப்பாமல் 106

இப்படிக்குச் செய்தபிழை யேதென்று நானறியேன்
செப்படி தோழியரே திங்கள்முகக் கன்னியரே, 107

தோழியருந் தானுரைப்பாள் 'துய்யவட வேங்கடவன்
ஆழியுடன் வந்து அழகாய் மணம்புணர்வார்' 108

என்றுசொலக் கோதையும் இதையங் குழைந்து நிதம்
அன்றில் குயில்மேகம் அரங்கருக்குத் தூதுவிட, 109

'தூதுவிட்டும் வாராமல் துய்யவட வேங்கடவன்
எதிரிருந்து கொண்டார் இனிமேல் மனஞ்சகியேன் 110

என்று மனம்நொந்து இருக்கநிதங் கோதையரும்
சென்றுவந்து தோழியர்கள் செப்பவே பாவையர்க்கு 111

'அச்சேதி கேட்டு ஆழ்வார் நடுநடுங்கி
அச்சுதனைப் பாடும் அழகான கோதையர்க்கு 112

சென்றுவந்து பிள்ளைவிடாய் தீர்த்த திருமகட்கு
மன்றலுஞ் செய்யாமல் வச்சிருந்தால் மோசம்வரும், 113

என்று திருமகளை எடுத்துச் சிவிகைவைச்சு
சென்று திருவரங்கம் சேவிக்க வேணுமென்று 114

நல்லநாள் பார்த்து நடந்து திருவரங்கம்
எல்லையுங் கிட்டி இருந்துதென் காவிரியில் 115

நீராட்டஞ் செய்து நெடும்போது செபஞ்செய்து
சீராட்ட வந்து திருகமளைத் தான்தேட 116

பல்லாக்கில் காணாமல் பைந்தொடியார் காணாமல்
எல்லாருங் காணாமல் என்மகளை யாரெடுத்தார் 117

தின்று மனம்நொந்து நாற்றிசையும் தான்தேடி
சென்று திருவரங்கந் திருக்கோயில் தான்புகுந்து 118

ஒருமகளை யானுடையேன் உலகளந்த மாயவனும்
திருமகளைத் தானெடுத்து செங்கண்மால் கொண்டொளித்தாய்!' 119

என்றாழ்வா ருஞ்சொல்ல இரங்கித் திருவரங்கர்
சென்றெங்களய்யர் திருவடியைத் தான்தொழுவார்!. 120

அப்போது கோதையரும் அரங்கர் அடியைவிட்டு
இப்போதும் அய்யர் இணையடியைத் தான்தொழுதாள்!!.

வாழ்த்தியே அய்யர் மகிழ்ந்து மகள்தனக்கும்
வாழ்த்தியே முற்று மகிழ்ந்து ரெங்கருக்கும். 122

வாழிமுதல் பாடி மங்களமும் தான்பாடி
'ஆழிநீர் வண்ணனுக்கு அழகாய் மணம்புணர்வாய்!' 123

என்றுசொல்லி யாழ்வாரும் இன்பமாய் ரெங்கர்தனை
மன்றல்செய்ய வாருமய்யா மணவாளா என்றழைத்தார்!!

பங்குனி மாசப் பவர்ணமையில் உத்திரத்தில்
அங்கூரஞ் செய்து அழகாய் மணம்புணர 125

வாருமய்யா வென்று மகிழ்ந்தேத்தி ரெங்கரையும்
சீரணிந்த கோதைதனைச் சிறப்பாகத் தானழைக்க.!!! 126

அப்போது நம்பெருமாள் ஆழ்வாரை விடைகொடுத்து
தப்பாமல் நான்வருவேன் தார்குழலி தன்னோடும். 127

என்றுசொல்லி ஆழ்வாரும் ஏகியே வில்லிபுத்தூர்
சென்றுதிரு மாளிகையில் சிறப்பாகத் தானிருந்து. 128

கோதையர்க்கு மன்றல் கோஷமாய்ச் செய்யவென்று
........................................................ 129

சீதையர்க்கு மன்றல் சிறப்பாகச் செய்யவென்று.
ஓலை யெழுதி உலகெலாம் நாளனுப்பி 130

.....................................................
கரும்பினல் கால்நிறுத்திக் கற்பகத்தால் பந்தலிட்ட 131

கரும்பினிடை வாழைகட்டி கஞ்சமலர் தொங்கவிட்டு.
.................................................... 132

பூக்கள் கொணர்ந்து பூம்பந்தல் தான்போட்டு.
...................................................... 133

மாங்கனிகள் தூக்கி வருச்கைப் பிலாதூக்கி
தேங்கனிகள் தூக்கி சிறப்பா யலங்கரித்து. 134

மேளமுடன் மத்தளமும் மேல்முரசுந் தானடிக்க
காளமுடன் நாகசுரம் கலந்து பரிமாற. 135

வானவர்கள் மலர்தூவி வந்து அடிபணிய
கானவர்கள் பூக்கொய்து கலந்து பணிந்தேத்த. 136

இந்திரனும் என்டிசையும் இறைஞ்சி மலர்தூவ
சந்திரனுஞ் சூரியனும் சாமரங்கள் தான்போட... 137

ரத்னமணி யாசனமும் ரத்தினக் கம்பளியும்
சித்ரமணி மண்டபமும் செம்பொன் குறடுகளும். 138

ஆழ்வார் கிளையும் அயலோர்கள் எல்லோரும்
ஆழ்வார் திருமகளை அன்பாகப் போற்றவந்த 139

தூபம் கமழத் தொண்டர்களுந் தான்பாட
தீபம் துலங்க ஸ்ரீவைஷ்ண வோரிருக்க 140

வேதந் துலங்க மேன்மேலும் சாஸ்திரங்கள்
கீதம் முழங்க கீர்த்தனங்கள் தான்முழங்க. 141

வாத்திமார் புல்லெடுத்து மறைகள் பலஓத.
.................................................................... 142

பூரண கும்பமுதல் பொற்கலசம் தானும்வைத்து
தாரணனைப் போத்தி நான்மறைகள் தானோத. 143

இப்படிக்கு ஆழ்வாரும் எல்லாருங் காத்திருக்க
சத்புருடன் வாராமல் தாமசமாய்த் தானிருக்க. 144

கொற்றப் புள்ளில் ரெங்கர் கொடிய வனங்கடந்து
வெற்றிச் சங்கூதி வில்லிபுத்தூர் தன்னில்வந்து. 145

மணவாள ராகி மணவறையில் தானிருந்து
மணஞ்செய்யும் வேளைகண்டு மறையோர்க்குத் தாங்கொடுத்தார்

ஆடைமுத லாபரணம் அவனிமுதல் பால்பசுக்கள்
கோடைமுதல் தானங் கொடுத்து நிறைந்தபின்பு 147

மந்தரமார் கோடி யுடுத்து மணமாலை
யந்தரி சூட்டி அழகான கோதையர்க்கு 148

மத்தளங் கொட்ட வரிசங்கம் நின்றூத
முத்தாலித் ததும்ப நிரைதரளப் பந்தலின்கண் 149

கைத்தலம் பத்திக் கலந்து பரிமாற.
.................................................................... 150

ஆழ்வாரும் நீர்வார்க்க அழகான கையேந்தி
ஆழ்வார் திருமகளை அழகாகத் தான்வாங்கி. 151

மன்றலுஞ்செய்து மகிழ்ந்து மதுவர்க்கம்
கன்றலு மூன்று கழித்து அரங்கருந்தான் 152

அக்கினி வளர்த்து அழகா யலங்கரித்து
அக்கினியைப் போத்தி அக்ஷதையும் தான்தூவி. 153

வாய்நல்லார் நல்ல மறையோதி மந்திரத்தால்.
.................................................................... 154

பஞ்சிலை நாணல்ப் படுத்துப் பரிதிவைத்து
.................................................................... 155

ஓமங்கள் செய்து ஒருக்காலும் மலர்தூவி
.............................................. 156

காசின் பணங்கள் கலந்துதா னங்கொடுத்து.
.............................................. 157

தீவலஞ் செய்து திரும்பி மனையில்வந்து
.............................................. 158

இம்மைக்கும் ஏழேழ் பிறவிக்கும் பார்த்தவாய்
நம்மை யுடையவன் நாரா யணன்தம்பி. 159

செம்மை யுடைய திருக்கையால் தாழ்த்தி
அம்மி மிதித்து அருந்ததியும் தான்பார்த்து 160

அரிமுதன் அச்சுதன் அங்கைமேலும் கைவைத்துப்
பொரி முகந்தபடிப் போத்தி மறையோரை 160

அக்ஷதைகள் வாங்கி அரங்கர் மணவரையில்
பக்ஷமுட னிருந்து பாக்கிலையுந் தான்போட்டு 161

கோதையுடன் கூடி குங்குமச் சப்பரத்தில்
சீதையுடன் கூடிச் சிறப்பாகத் தானிருந்தார். 162

அச்சேதி கேட்டு ஆழ்வார் மனமகிழ்ந்து
இச்சேதி வைபவங்கள் எங்குங் கிடையாது. 163

என்று பெரியாழ்வார் இளகி மனமகிழ்ந்து
குன்று குடையெடுத்த கோனை மகிழ்ந்துநிதம். 164

வாழி முதல்பாடி மங்களமும் தான்பாட
ஆழிமுதல் பாடி ஆழ்வாரும் போற்றிநின்றார். 165

வாழும் புதுவைநகர் மாமறையோர் தான்வாழி.
ஆழிநிறை வண்ணன்முதல் ஆழ்வார்கள் தான்வாழி. 166

கோதையரும் வாழி கோயில்களும் தான்வாழி
சீதையரும் வாழி செகமுழுதும் தான்வாழி. 167

கோதை நாச்சியார் தாலாட்டு முற்றிற்று.

## ஆழ்வார்திருநகரித் திருஞாந முத்திரைக் கோவை நூல்களின் மதிப்புரைகளில் சில

**திருநாராயணையங்கார்ஸ்வாமி,** செந்தமிழ்ப் பத்திராசிரியர், மதுரை.

தமிழிலக்கியங்களில் தலைசிறந்தவற்றுள் கம்பர் இயற்றிய இராமாவதாரமும் ஒன்று. தமிழ்நாட்டுள் யாவரும், இதன் நடையழகு, சொல் லின்பம், பொருளாழம், அணிநயம், சுவைநயம், கற்பனை, அரசியல், ஒழுக்கநெறி, அறவுரை, வீரவுரை முதலியவற்றில் ஈடுபட்டு இதனையே பெரிதும் பயில்வாராயினர். இதனைப் பழைய ஓலையேட்டுச்சுவடி களோடு ஒப்புநோக்கி நன்கு ஆராய்ந்து பதித்து வெளியிட முயன்று வருவாருள் திரு பெரியன் ஸ்ரீநிவாசையங்காரவர்களும் ஒருவராவர். இவர் பெருங்குடிப்பிறப்பும், அருந்தமிழ்ப் பயிற்சியும், பற்றும் உடையவர். இவருக்குக் கிடைத்த ஓலைச்சுவடிகள் இருநூறு வருடங்களுக்கு முன் ஆழ்வார்-திருநகரியில் இருந்த ஒரு புலவரும், பிறரும் எழுதியவை. "ஆழ்வார்திருநகரி ஏடுகள் பதிப்போர்க்கு மிகவும் உபயோகப்படத் தக்கன. பழந்தமிழ்நூல் வெளியீடுகளுள் பத்துப்பாட்டு, பதிற்றுப்பத்து, பரிபாடல், புறநானூறு முதலிய நூற்பதிப்புக்களுக்கு ஆழ்வார்திருநகரி ஏட்டுப்பிரதிகள் மிகவும் உபயோகமாயிருந்தன" என்பது ஐயரவர்கள் எழுதிய முகவுரையால் அறிந்தது. இந்நூற் (பாலகாண்டம்) பரிசோதகரான வித்வான் ராவ் சாஹிப் ஸ்ரீ மு. இராகவையங்காரவர்கள் பரந்த ஆராய்ச்சியும் விரிந்த புலமையும் வாய்ந்தவர்கள். பல தமிழ் நூற்பதிப்புக்களைச் செவ்விதின் ஆராய்ந்து வெளியிட்டவர். இவ்வாறு தகுந்த சுவடிகளின் உதவிகொண்டு சிறந்த புலவரால் இதனைப் பரிசோதித்து வெளியிடுவித்த திரு பெரியன் ஸ்ரீநிவாசையங்காரவர்களுடைய தமிழ்ப்பணி பாராட்டத்தகும்.

**வித்வான் மு. இராகவையங்கார் அவர்கள்** 16—10—'42.

தேவரீர் அன்புடன் அனுப்பிய அயோத்தியா காண்டப் பதிப்பின் பிரதி கிடைக்கப்பெற்றுப் பரம சந்தோஷம் அடைந்தேன். ஆதியில் சங்கல்பித்த அரிய கைங்கர்யத்தை நிறைவேற்றி வரும் தேவரீருக்கு மேன்மேலும் ஊக்கமும், சௌகரியங்களும் அமைத்துதவும்படி எம்பெருமானைப் பிரார்த்திக்கிறேன். இப்பதிப்பு அநேக சிறந்த பாடங்கள் கொண்டிருப்பது மகிழ்ச்சி தருகின்றது. தேவரீருடைய பிதிர் அபிமானமும், பாஷாபிமானமும் தமிழ் நாட்டவரால் கொண்டாடத் தக்கன. தங்கள் வெளியீட்டால் கம்பராமா

யணத்தின் பழைய அமைப்பும், அரிய பாடபேதங்கள் பலவும் விளங்குதலால் ஆராய்ச்சி செய்து கொள்வதற்கும் பயன்படுமென்பதில் ஐயமில்லை, ஏனைய காண்டங்களும் தங்கள் பெருமுயற்சியால் வெளிவருவதைத் தமிழ்நாடு எதிர்பார்க்கக்கூடும். மேலும் இவ்வரிய தொண்டைத்தொடர்ந்து நடத்திப் பூர்த்திபெற வைக்குபடி தமிழ்த்தெய்வமான ஸ்ரீ ஆழ்வாரைச் சரணம் புகுகிறேன்.

**வித்துவான் ரா. இராகவையங்கார் ஸ்வாமி** *17—10—'42*
*அண்ணாமலைப் பல்கலைக் கழகம், சிதம்பரம்.*

தேவரீர் கிருபை கூர்ந்துதவிய கம்பராமாயண பாலகாண்டம் எய்தப் பெற்று மகிழ் கூர்ந்தேன். முன்னைப்பிரதிகளினும் அதிகமான திருத்தங்கள் இருத்தல் கண்டு மனம் உவக்கின்றேன்.

**முதுபெருங்கவி தேசிகவிநாயகம் பிள்ளை அவர்கள்,**
**புத்தேரி** *12—7—'43*

ஆழ்வார்திருநகரி தமிழ்நாட்டின் நடுநாயகமான ஊர் என்பது பண்டை வரலாறுகளால் நன்கு தெளிவாகின்றது. ஆதிகாலமுதலே அங்கு தமிழ் வித்துவான்கள் பலர் வாழ்ந்து வந்திருக்கின்றனர். ஆழ்வார்திருநகரி ஏட்டுப் பிரதிகளுக்கு எங்கும் விசேஷ மதிப்பு உண்டு. அந்த ஏட்டுப்பிரதிகளைத் தாங்கள் தக்க அறிஞர்களைக் கொண்டு அழகான முறையில் வெளியிடச் செய்திருப்பது மிகவும் பாராட்டற்குரியதாம். ஒரு பழைய ஏட்டுப்பிரதியைப் பரிசோதனை செய்து யாவரும் எளிதில் கற்கும்படி நல்லமுறையில் வெளியிடுபவருக்கு ஒரு பழைய திருக்கோயிலை ஜீரணோத்தாரணம் செய்த பெரும் புண்ணியம் உண்டென்பது பெரியோர்கள் கண்ட உண்மை.

**ஸ்ரீ ராவ்சாகிப் S. வையாபுரிப் பிள்ளையவர்கள், B.A., B.L.,**
*தமிழ் ஆராய்ச்சித்துறைத் தலைவர், பல்கலைக்கழகம்,*
*சென்னை. 1—3—'44.*

இற்றைக்குச் சுமார் 500 ஆண்டுகட்கு முன்பு தொடங்கிச் செந்தமிழன்னையைப் போற்றி தமிழ்நாட்டிற்கும் இலக்கிய உலகிற்கும் அரிய தொண்டுகள் இயற்றி வந்த பெருமுது நகர்களுள் குருகூர் எனப்பெயர் பெற்ற ஆழ்வார்திருநகரி தலைசிறந்து விளங்குவதாகும். இங்குச்செழித்த ஆராய்ச்சித் துறையாளர்களின் நன்முயற்சியின் மூலமாகவே பண்டைத் தமிழ் இலக்கியங்கள் பலவும் நமக்குக் கிடைத்திருக்கின்றன. டாக்டர் உ. வே. சாமிநாதையர் மஹாவித்வான் ரா. இராகவையங்கார் முதலியோர்களுக்குப் பண்டைத்தமிழ்க் கருவூலங்கள்

அகப்பட்ட புண்ணியஸ்தலம் இதுவேயாகும். சுமார் ஐம்பது ஆண்டுகட்கு முன்பு வரை இந்நகரினர் குன்றாத ஊக்கங்கொண்டு தமிழ்கற்றுத் தமிழ்க்கருவூலங்களைப் பேணி வந்தனர். தமிழ் இலக்கிய சரித்திரம் எழுதப்புகுவார் இத் திருப்பதியின் இலக்கிய வாழ்க்கையை மறந்துவிடமுடியாது.

எனவே இப்பிரதேசத்திலுள்ள பிரதிகள் வித்வப்பரம்பரையினருள் ஒருசாராரால் மரபுநெறி தவறாது எழுதப் பட்டனவாம். இவற்றுள் எல்லாம் தலைசிறந்தவை ஆழ்வார்திருநகரிப்பிரதிகளேயாகும். ஆகவே, அந்த தேசத்துப் பிரதிகளை தாங்கள் பயன்படுத்தி வெளியிட்டிருக்கும் இக்கம்பராமாயணப்பதிப்பு மிகவும் பயன்படத் தக்கது என்று உறுதியாகக் கூறுவேன்.

**ஸ்ரீ கி. வா. ஜகன்னாதன், B.O.L. 'கலைமகள்' ஆசிரியர், சென்னை.**

குலத்தினால் பெரியன் குணத்தினால் பெரியன் கொழி தமிழ் வளத்தினால்பெரியன்
நலத்தினால் பெரியன் அன்பினால் பெரியன் நாயகன் இராகவன்தாளில்
பலத்தநல்பத்தி பழுத்ததன்மனத்துப் பண்பினால் பெரியன் சீர்க்குருகூர்
நிலத்தினில் மாறன் அடிக்குடியாகும் நிறைவினால் பெரியனாம் இயல்போய்!
தேனின் வாசத்தால் பெரியமா மகிழின் திரு அலங் கல் புனை ஆழ்வார்
மானநல் அடிக்கு எத்தமிழ்ப் பிரபந்தம் வையகந் திருப்பினும் அதனை
ஆனநல் அன்போடு அச்சினில் பதிக்கும் ஆர்வ மிக்கோளப் பலநூலை
வானமா மழை என்றேதரும் பெரிய வள்ளலே மற்றிது காண்க.
செந்தமிழ் நூல்கள் செவ்விதில் அச்சில் திகழ்தர வேண்டும் என்றெண்ணி
இந்தமா நிலத்தில் யார் இதை ஆற்ற ஏற்றவர் என்பதும் நினைந்து
சொந்த ஆற்றலினால் பொருளினால் தொண்டினால் திறம்பட அவற்றைச்
சந்தமார் தரவே விளக்கும் நின்இயல்பு தரணியில் எவர்செய விழைவார்.

**ஸ்ரீ K. சுப்பாராவ், ஆசிரியர், கும்பகோணம்.**

ஆழ்வார்திருநகரிப் பிரதியில் அநேக சிறந்த பாடங்கள் கிடைத்தன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள் கிறேன். குறிப்பாக ஆரண்யகாண்டப் பாடங்கள் ஒரு பெரும் நிதிபோல் அமைந்துள்ளன என்போன்ற கம்பன் கலைப்பித்தருக்கு இவை ஆராய்ச்சிக்குப்பெரிதும் பயன்படும் என்பதில் ஐயமில்லை. தாங்கள் மேற்கொண்ட இவ்வுத்தம கைங்கர்யத்தின் பெருமை வருங்காலத்தில் சிறந்துவிளங்கும் என்பதில் ஐயமில்லை. ஆழ்வார் அருளால் கிஷ்கிந்தாகாண் டமும், ஏனைய காண்டங்களும் விரைவில் அச்சில் ஏறுமென நம்புகிறேன்.

**ஸ்ரீ இராமகிருஷ்ண விஜயம் சர்வதாரி ௵ ஆனி ௴**

கற்றோர் விரும்பும் காவியம் ஆக்குவதில் காளிதாசனும் மேலைநாட்டு மில்டனும் கைதேர்ந்தவராவர். நாட்டார்

நயக்கும் நாடக நன்னூல் இயற்றுவதில் செகப்பிரியர் (Shakespeare) சிறந்தவராவார். இம்மூவரும் ஒருவராய் உருவெடுத்த இயல்புடையார் கல்வியிற் பெரிய கம்பராவர். கலைஞனின் கருத்தினை அவன் நிலையில் நின்று உண்மைக் கவிதையின் உருவை அறிய அந்நூலைப் பதிப்பிக்கும் அறிஞராவார் பலர் முயன்று வருகின்றனர். அத்தகைய பதிப்புகளில் இதுவும் ஒன்ருகும். ஏனைய பதிப்புக்கள் பலவற்றினும் இதன்பால் சிறந்த இயல்புகள் சில காணப்படுகின்றன. பொருத்தமான பாடங்கள் அமைந்து பொலிகின்றன.

வாணிதாஸன் கூறியவை

மால் ஊட்டும் பிறவியெனும் பெருங்கடலைக் கடந்து உயிர்கள் மாலைச்சேரப் பால்ஊட்டும் பசுந்தமிழில் பரமகுரு வகுளம் ஒளிர் பகவான் ஏற்கும் தாலாட்டின் சுவைஅறிந்து மனம்உருக அச்சேற்றித் தரணிக்கு ஈந்த கோலோட்டும் பெரியன் எனும் மரபுஉதித்த கோதில்குணக் கொழுந்து நீயே. மயக்குறு மாமறை மாசு நீங்கிடக் கயக்கறு போதம் கனிந்து தெளிய கோதில் கனிஎனக்குணபரன் தன்னைத், தீதில் திருவாய் மொழியினில் திரட்டிய பகவன்பெரியன் பராங்குசன் சரிதம், தகையுறு நெஞ்சம் தழைக்க அருளிய தேவேச பாரதித் தெருளோன் பெயரை, நாவீறனதன் நற்புகழ் தன்னும், உலகுக்கு அளித்த ஒருபெருங்குணத் தோய், நிலவுச் செல்வம் நீடிசைக் குலத்துப் பெரியன் ஸ்ரீநிவாஸப் பெரியோய் அரிது நின்செயல்அனைத்தும் ஓங்குக. கைம்மாறு எவன்செயக் கருதுவன் வாழி, அம்மா பெரிதுன் அன்பின் திறனே.

24—9—'65 தென்திருப்பேரை அபிநவ காளமேகம்
ஸ்ரீ அநந்த கிருஷ்ணையங்கார் ஸ்வாமி

சேடனும் புலவர் கோன்முன் செய்பராங் குசன்தன் சரிதை
நாடகச் சுவையுட் கொண்டே நல்அறி வாளர் யாரும்
ஏடவிழ் வகுளத்தாரான் இன்னருட்கு இலக்காய் வாழ்வான்
பீடமை சீநி வாசப் பெரியனே வெளியிட் டானே.

N. R. கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் அவர்கள்
அட்வகேட், மதுரை 17—5—1951.

தேவரீர் அடியேனுக்கு கொடுத்துதவிய கம்பராமாயணம் 4 காண்டங்களையும் படித்துப் பார்த்தேன். படலங்களின் பெயர் அமைப்புகள் மிகப்பொருத்தமாகவும், அந்தந்த விஷயத்துக்கு ஏற்றதாகவும் இருக்கின்றன. ஆங்காங்குள்ள பாட வேறுபாடுகளும் சில பொருத்தமாகவும் சுவைமிகுந்த

பொருள் தருவனவாகவும் அமைந்துள்ளன. சிலபாடங்கள் வலிந்து பொருள் கொள்ள வேண்டியவையாயிருக்கின்றன.

கம்பர் காலத்துக்குப்பின் அவர்இயற்றிய பெருங்காவிய மாகிய இராமாவதாரம் ஓர்மையோடும் ஆர்வத்தோடும் காப்பாற்றிக் கற்கப் பெற்ற இடங்களுள், ஆழ்வார்திருநகரி தலைசிறந்த கல்விக்கூடமாகும். அதன்கண் விளங்கிய பெரும் புலவர்கள் கற்றுத் தேர்ந்த சுவடிப் பிரதியை அதிற் கண்ட வாறு புத்தகமாய் அச்சேற்றி உதவியது தமிழ்க் கல்விக்கும், தமிழ் நாட்டுக்கும் தேவரீர் செய்த பெருந்தொண்டாகும். இக்ஷ்வாகுவம்சத்தை ராமன் தன்குலம் ஆக்கிக்கொண்டான் என்று ஹனுமான் முடிவு கட்டியது போல் தேவரீர் வம்சத் தில் தேவரீர் பெரியன் ஸ்ரீநிவாசையங்கார் குலமாக ஆக்கிக் கொண்டு விட்டீர்கள். நம்மாழ்வார் தாலாட்டு முத லானவை அடங்கிய ஸம்புடமும், நம்மாழ்வார் பிள்ளைத் தமிழ் முதலியநூல்கள் அடங்கியமற்ற ஸம்புடமும் படிக்கப் படிக்க இன்பம் தருவனவாயும், தெவிட்டாக் கனிகளாயும் அமைந்த பண்டித பாமர சாமான்யமாய் எல்லோருக்கும் இன்பம் தருவனவாய் அமைந்திருப்பது இவைகளின் மிகவும் குறிப்பிடத்தக்க பெருமையாகும்.

*(14—4—'48)* Sri Jagadacharya Simhasanadhi Pathi
P. B Annangara Chariyar Editor Granthamala
Congeevaram

ஸ்ரீமான். உ. வே. பெரியன் ஸ்ரீநிவாஸாசாரியர் ஸ்வாமி
ஸன்னதியில், அடியேன் செய்யும் விண்ணப்பம்.

பரமகிருபையுடன் தெந்திருப்பேரை ஸ்வாமி மூலமாக அனுப்பித் தந்த மூன்று புத்தகங்களும் திருமுகமும் சென்னிக்கு அணியாயின. உலகுக்கு இது மிகப்பெரிய தொண்டு. உள்ளடங்காத மகிழ்ச்சியே அடியேற்கு. தேவரீர் எடுத்துக் கொண்ட கைங்கர்யத்திற்குப்பல மடாதி பதிகள் கைகொடுக்க முன்வருவார்கள். எளிதாக நிறை வேறக்கூடியது. இவ்வளவே விஞ்ஞாபித்து நிற்கின்றேன். க்ஷமித்தருளவேணும், தாஸன்.

அண்ணாமலை பல்கலைக் கழகத்துத் தமிழாராய்ச்சித்துறை,
விரிவுரையாளர் திரு. ஸி. இராமாநுஜய்யங்கார்

கம்பன் எனுமக்கலைக் கடல்முன் கருணைக்கடலென்று உலகுதொழும்
நம்பி புகழால் இராமவ தார நூலாம் நல்லமுதம்
இம்பர் அறிஞர் பருகிடுமாறீந்ததன்சீர் எடுத்து இயம்பல்

கும்பமுனிக்கும் அரிதென்றால் யாரேகூற வல்லாரே.
மற்றந்நூலில்வரைவோரால்மகிழ்ந்து கற்போரால்பிறரால்உற்றவேறு
பாடுபல அவற்றுள் கம்பன் உரையீது என்று
இற்றைநாளில் அறிதல்அரிதுஇந்தநிலையில் எழில்குருகூர்க்
கற்றபெரியோன் எழுதிவைத்த இந்நூற்சுவடி கண்டுஉவந்து
சீரார் தமிழ்நாட்டு ஆங்காங்குத்திகழும் பலஊர்ச் சுவடிகளுள்
ஏரார்குருகூர்ச் சுவடிகளே தமிழ்மாமக்கட்கு எழில்அணியாய்
பாரோர்புகலும் பழந்தமிழ் நூல்பலவும் பதித்துத் தந்தபெரும்
பேராசிரியர் பெருமதிப்புப் பெற்றபெற்றி பெரிதுஉணர்ந்து
தொகுத்துக்கற்றுத்துறைபோய தூயபுலவர் துணைகொண்டு
வகுத்தங்கு அவற்றுள் தான்கண்ட வண்ணம் பிழைகள் மலியாது
நுகஃதுப் பகல்போல் நடுநின்று நோக்கும் அறிஞர் பலர்மதிக்க
மிகுத்தவெண்பொன் செலவிட்டு விரைந்தச்சிட்டுவிழைந்தளித்
வெறியார் சோலைக் குருகூர்வாழ் வெ. நா. ஸ்ரீநிவாசன்என (தான்
நெறிதேர் புலவர் பாராட்ட நின்றான் வாழி நீடுழி.

R. P. SETHU PILLAI
Professor of Tamil, University of Madras, *8—10—'54*

தமிழ்நாடு பெற்றுள்ள தனிப்பெருங் கலைச்செல்வங்களுள் தலைசிறந்தது கம்பராமாயணம். கவிதைக்கொரு புலவன் கம்பன் என்பது நாடறிந்த உண்மை. ஆயினும் நெடுங்காலமாக நல்லதொரு கம்பராமாயணப் பதிப்பு இல்லாதது பெருங்குறையே. அக்குறையை அகற்ற வந்துள்ளது ஆழ்வார்திருநகரிப் பதிப்பு. நம்மாழ்வார் பிறந்தருளும் பேறுபெற்ற திருநகரில் கம்பர் காவியத்தைப் பொன்னேபோல் போற்றும் பெருமை சான்ற புலமைக் குலத்திலே தோன்றிய, பெரியன் ஸ்ரீநிவாஸையங்கார் அவர்கள் பதிப்பித்துள்ள கம்பராமாயணத்தைக் கற்றறிந்தோர் உளங்கனிந்து பாராட்டுவர்.

## Copy of The Proceedings of The Director of Public Instruction Madras,

*Dis. No. 2711/54 Dated 13-5-54.*

Sub: Books and Publications 3 volumes of Kambaramayanam and 2 other books on Nammalwar by Perian V. N. Srinivasa Iyengar of Alwartirunagari Tinnevelly District brought to notice.

The books mentioned below are commended for use in the libraries attached to schools, Colleges and in Public libraries.

Volumes of Kambaramayanam (Nos *357*, *358* &*359*)

| | | |
|---|---|---|
| Bala Ayodhya Aranya Kandangal | Rs. | *8—0—0* |
| Kishkinda Sundara Kandangal | Rs. | *6—0—0* |
| Yudha Kandam | Rs. | *10—0—0* |

Nammalwar *2* volumes of Thirugnana Mudiri Kovai (Nos *306* & *361*).

| | | |
|---|---|---|
| Nammalwar Thalattu & *5* others | Rs. | *5—0—0* |
| Nammalwar Pillaithamil & *3* others | Rs. | *3—8—0* |

By Perian V. N, Srinivasa Iyengar

Copies can be had from Perian V. N. Srinivasan, Alwartirunagari Tinnevelly Dt.

K. R. MANICKAM.
For Director of Public Instruction.

Copy forward to

The Divisional Inspectors of Schools, D. E. Os. (Secretary, Local authorities) and Special Officer for Education Puduk kotai. The Inspectresses of Girls Schools, The Inspector of Oriental Schools Madras, The Inspector of Anglo Indian Schools Madras, The Principals of all Colleges and copy to Perian V.N.Srinivasa Iyengar.

## Copy of The Proceedings of The Commissioner H. R. & E. C. E. (Adm) Department, Madras – 2.

*No. L. Dis. 28933/54 Dated 8-10-54.*

Sub:- Work from original manuscript encouragement of.

Ref:- From Perian V. N. Srinivasan. Alwartirunagari Tinne-velly Dt, letter date Nil.

Sri V. N. Perian Srinivasan residing at Alwartiru nagari Tinnevelly Dt, has publshed *(1)* Kambaramayanam Kandam *1-6* *(2)* Six works of Nammalwar and (*3*) four prabandhams on Nammalwar. These publications are of great value and edited after consulting valuable and old manuscripts treasured atAlwartirunagari. The trustees of religious Institutions having libraries are advised to

purchase these books for maintenance in the Devastha nam libraries.

(Sd) S. V. RAJAM,
For- Commissioner,
*8—10—54*.

To.

All Religious institutions having libraries as per list.
All A. C's and Dy Cs 3. Perian V.N. SrinivasanAvl.

தமிழறிஞர் பலர்களாலும் தினசரி மாதப் பத்திரிகைகளாலும் பாராட்டிவருகிற
ஆழ்வார்திருநகரி கவடிகளினின்று பதிப்பித்தவை. ரூ. பை.

| | | |
|---|---|---|
| 1 | நம்மாழ்வார் நூற்றெட்டுத் திருப்பதி தாலாட்டு | 1-00 |
| 2 | ஸ்ரீ சடகோபன் சந்திரகலா மாலை | 0-12 |
| 3 | ஸ்ரீ சடகோபன் திவ்ய சரித்திரம் (17 படலங்கள் 1200 கவிகளில் தேவராஜ பாரதி இயற்றியது) | 2-00 |
| 4 | திவ்யபரந்த பாசுரப்படி இராமாயனம் (இலவசம்) | |
| 5 | தேவர்பிரான் சந்திரகலாமாலை | 0-12 |
| 6 | நம்மாழ்வார் பிள்ளைத்தமிழ் | 1-25 |
| 7 | திருக்குருகூர் மகிழ்மாறன் | 0-50 |
| 8 | குருகூர்ப்பள்ளு (சிவகங்கை இராமாநுஜையங்கார் ஸ்வாமி விமரிசனத்துடன்) | 1-50 |
| 9 | முதலாழ்வார்கள் பெரியாழ்வார் வைபவங்கள் அழகியநம்பிதாஸர் இயற்றியது | 1-00 |
| 10 | தெந்திருப்பேரை திருக்கோளூர் திருப்பணிமாலை | 1-00 |
| 11 | திருவைகுந்தநாதன் பிள்ளைத் தமிழ் | 1-50 |
| 12 | கம்பராமாயணம் பாலகாண்டம் ஏழு படலங்கள் (வையாபுரிப் பிள்ளை அப்புசாமிஅய்யர் பரிசோதித்தது) | 1-25 |
| 13 | தெய்வச்சிலையார் விறலிவிடு தூது (வையாபுரிப்பிள்ளை சோதித்தது) | 1-25 |
| 14 | கம்பராமாயணம் பாலகாண்டம் (ஆழ்வார்திருநகரிச் சுவடிகளின்படி) | 3-50 |
| 15 | ஷெ திரு. அயோத்தியா காண்டம் ,, | 3-50 |
| 16 | ஷெ ஆரண்யகாண்டம் ,, | 3-50 |

17 ஸ்ரீபராங்குச நாடகம் (சேஷகவியார்),, 1-25
18 கம்பராமாயணம் கிட்கிந்தா காண்டம் (சுவடிப்படி) 3-00
19 நவதிருப்பதிமகாத்மியம் குருகூர் திருப்புளியங்குடி
வடமொழியிலுள்ள தாம்ப்ரவர்னி மகாத்மியம் அச்சில்
20 கம்பராமாயணம் சுந்தரகாண்டம் 3-50
21 திருக்கூர் திருப்பணி மாலை அச்சில் 00
22 கம்பராமாயணம் யுத்தகாண்டம் 10-00
23 திருச்சிறுபுலியூர் உலா குறிப்புரையுடன் 1-50
24 குருகைமாலை T.K. இராமானுஜையங்கார்ஸ்வாமி 1-50
25 சுவாமி திருவேங்கடமுடையான் பிள்ளைத்திருநாமம் ,, 1-50
26 அழகர் குறவஞ்சி கவி குஞ்சரபாரதி இயற்றியது 1-50
27 நம்மாழ்வார் திருநாமங்கள் 1-00
28 அனுமார் பிள்ளைத்தமிழ் அருணாசலக்கவிராயரால் ,, 1-00
29 உத்தரகாண்டம் கம்பராமாயணம் T. K. இராமா
நுஜையங்கார் ஸ்வாமி முன்னுரையுடன் 3-50
30 திருப்புல்லாணி நொண்டி நாடகம் வீர ராகவை
யங்கார் இயற்றியது. ,, ,, 1-25
31 (ஸ்ரீவில்லிபுத்தூர்) திருமலைக் குறவஞ்சி முத்துக்
குமாருப் புலவர் இயற்றியது ,, ,, 1-50
32 திருக்குறுங்குடிப் பிள்ளைத்தமிழ் ,, ,, 1-50
33 நித்தியபாராயண மலர் 0-50
34 முமுக்ஷுப்படி 0-65

பெரியன் வெ. நா. ஸ்ரீநிவாசன்,
பதிப்பாசிரியன்.
திருஞானமுத்தரைப் பிரசுராலயம்,
ஆழ்வார்திருநகரி.

ஸ்ரீ ஆனந்தவிநாயகர் அச்சகம், ஸ்ரீவைகுண்டம்.